தமிழ்ப் பல்கலைக் கழகச் செய்தி மலர்

மலர் 1 திருவள்ளுவர் ஆண்டு 2013, சித்திரை 1 இதழ் 1
14—4—1982

சில சொற்கள்......

சித்திரைத் திங்கள் முதல் நாள் எங்கள் வணக்கத்துடன் தமிழில் பல்கலைக்கழகச் செய்தி மலர் வெளியாகிறது.

தமிழகத்திலும், இந்தியாவின் பிறமாநிலங்களிலும், பிறநாடுகளிலும் வாழும் தமிழ்ப் பெருமக்களின் நெடு நாள் கோரிக்கையின் விளைவு இந்தத் தமிழ்ப் பல்கலைக்கழகம்.

தூரக்கிழக்கு நாடுகள். ஆப்பிரிக்காக் கண்டம், மேலைநாடுகள் முதலியவற்றில் வாழும் ஒரு கோடித் தமிழர்கள் தொடர்பு கொள்ளும் தாயக இணைப்பாக அறிவுப் பிணைப்பாக இயங்க வேண்டும் என்ற ஆவலின் வெளிப்பாடு இந்தத் தமிழ்ப்பல்கலைக்கழகம். வல்லுநர்குழு வடிவமைத்துச் சட்டம் தீட்டித் தமிழ் நாட்டு அரசாங்கம் பல்கலைக் கழகத்தை இயங்க வைத்த நாள் முதல் நடந்த செய்திகளைத் தமிழ் மக்கள் திங்கள்தோறும் அறிய வேண்டும் என்ற அவாவால் வெளியாகும் இந்த இதழைப் படித்துத் திருத்தங்கள், சேர்க்கைகள், மாற்றங்கள் முதலியவற்றை எங்களுக்குக் கூறி வாழ்த்த வேண்டுகிறோம்.

உயர்தர தமிழாராய்ச்சி என்பது ஒரு கூட்டு முயற்சியாகும் ஒன்றிரண்டு நிறுவனங்களோ, ஓரிரு அறிஞர்களோ செய்து முடிக்கத் தக்கதன்று. பலர் பலநாள் பல நிறுவனங்கள் வழி செய்து நிகழ்த்த வேண்டிய ஒன்று. அதற்குரிய வழி வகைகளையும் கூறவேண்டுகிறோம் தமிழ்ப்பல்கலைக் கழக முன்னேற்றம் உங்கள் ஒத்துழைப்பின் உரத்தால் உறுதி பெறும் இதனை நாம் மறந்துவிடலாகாது.

வணக்கத்துடன்,
வ. அய் சுப்பிரமணியம்,
துணை வேந்தர்.

தமிழ்ப் பல்கலைக் கழகம் - ஐந்தரை மாத நிகழ்ச்சிகள் ஒரு கண்ணோட்டம்

* 1981 ஆம் ஆண்டு மதுரையில் நடந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் இறுதி நாள் உரையில் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி ஆர். தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்கும் கருத்தைத் தெரிவித்தார்.

* வல்லுநர் குழு ஒன்றை அமைத்துத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குரிய திட்டம் வகுக்கப்பட்டது.

* கலை, பண்பாடு, மருத்துவம், தத்துவம், இசை, நாடகம், சிற்பம், ஓவியம், சுவடி-பழைய நூல்களைப் பதிப்பித்தல், கல்வெட்டுகள் செப்பேடுகள் முதலியவற்றைப் பதிப்பித்தல், வெளிநாட்டுத் தமிழர்களின் தாயகத் தொடர்பு முதலியவற்றைத் தமது அறிக்கையில் வல்லுநர்குழு வற்புறுத்தி, எட்டு கோடி ரூபாய் கட்டடத்திற்கும் 25 இலட்சம் ரூபாய் ஆண்டுத் தொடர் செலவுக்கும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டித் தமது அறிக்கையை அரசாங்கத்திற்கு அளித்தது.

* பல்கலைச் செல்வங்களின் உறைவிடமான தஞ்சாவூரில் இந்தப் பல்கலைக்கழகத்தைத் தொடங்குவதென அரசு முடிவு செய்தது.

* தஞ்சை அரண்மனையின் பழைய பகுதியை வல்லுநர் குழு உறுப்பினர் சிலர் பார்வையிட்டனர்; இங்கு, ஏழரை இலட்சம் ரூபாய் செலவில் சில மாற்றங்கள் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

* தமிழக ஆளுநர், 1981 செப்டெம்பர் 13ம் நாள் தமிழ்ப் பல்கலைக்கழக அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்தார்.

* தமிழ்ப் பல்கலைக்கழகம் 1981 செப்டெம்பர் 15ம் நாள் ஆளுநர் மேதகு சாதிக் அலி அவர்களால், மாண்புமிகு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையில், மாண்புமிகு செ.அரங்கநாயகம் முதலிய அமைச்சர்கள், பல இலட்சம் மக்கள் ஆகியவர்கள் முன்னிலையில் தொடங்கப்பட்டது.

* தமிழக முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். செப்டெம்பர் 17ம் தேதி காலை பத்து மணிக்குக் கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம், வருவாய்த்துறை அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம், கல்வித்துறைச் செயலாளர் செ. இராமதாசு முதலியவர்கள் முன்னிலையில், துணைவேந்தர் அறையில் தமிழ் நந்தா விளக்கை ஏற்றுவித்தார்.

* துணைவேந்தர் டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் 19-9-81 பிற்பகல் தமது பொறுப்பை ஏற்று 20-9-81ம் நாள் காலை 10 மணிக்குத் தஞ்சையில் தமது பணியைத் துவங்கினார்.

* சென்னையில் கல்வித்துறை, நிதித்துறை அதிகாரிகளுடன் செயற்படுத்த வேண்டிய முக்கியத் திட்டங்களைத் துணைவேந்தர் ஆராய்ந்தார்.

* சென்னை, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் முதலிய நகரங்களில் தமிழாசிரியர்களைக் கலந்தாய்ந்து செயற்படுத்தும் திட்டங்களை உறுதிப்படுத்தினார்.

* பல்கலைக்கழக மானியக்குழு, நடுவணரசின் கல்வித்துறை முதலியவற்றுடன் கலந்தாய்ந்து பல்கலைக்கழக மானியக்குழுவின் 12. அ. சட்டத்தின்படி, தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தையும் அதன் ஆய்வுத்திட்டங்களையும் அளவிட்டு மானியம் வழங்கக் கேட்டுக் கொண்டார்.

முக்கண் !

ஒரு பல்கலைக் கழகத்தின் வலக்கண் அதன் கற்றறிந்தடங்கிய பேராசிரியச் சான்றோர்கள். அதன் இடக்கண் நூல் நிலையம். மூன்றாவது கண் அதன் தரமான பெருமை தரும் வெளியீடுகள்.

* தற்காலிக ஆளுநர்குழு, ஆட்சிப் பேரவை, நிதிக்குழு ஆகியவற்றை உருவாக்கினார்.

* முதல் ஆளுநர்குழு, நிதிக்குழு ஆகிய இரண்டும் 21-11-81 அன்று கூடி, தமிழ்ப் பல்கலைக்கழகச் செயற்பாட்டுத்திட்டங்களை வரையறுத்தன. 1981-82க்கான நிதியறிக்கை ஒப்புக்கொள்ளப்பட்டது. மாதந்தோறும் ஆளுநர் குழு கூடுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

* 21-11-81ல் கூடிய ஆட்சிக்குழுக் கூட்டத்தில் ஆய்வாளர்களுக்குரிய தகுதிகள் வரையறை செய்யப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டது.

இல்லாமை இல்லையாகுக!

தமிழில் 1981 செப்டெம்பர் 15ஆம் நாளுக்குப் பிறகு வெளியான எந்தத் தமிழ் நூலாயினும் அதன் ஒரு படியை, விலைபெறு அஞ்சலில் (V.P.P) நூலகர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், தமிழ்நாடு என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம். தமிழ் பற்றி இந்நூல் நிலையத்தில் இல்லாத நூல் எங்குமில்லை என்ற உணர்வை விரைவில் தோற்றுவிப்பது நல்லதல்லவா?

* ஆய்வாளர்களுக்குரிய தேர்வுக்குழுவைப் பல்கலைக்கழகச் சட்டத்திற்கேற்ப உருவாக்கி, டிசம்பர் 11ம் நாள் முதல் (1981), சனவரி 21ம் நாள் வரை (1982) பதினாறு துறைகளுக்குக் கூட்டங்களைக் கூட்டித் தக்கவர்களைத் தேர்ந்தெடுக்க வழி செய்யப்பட்டது.

* பல்கலைக்கழக முதல் பேரவைக் கூட்டம் 22-12-81ல் கூடி 1981-82க்குரிய நிதி அறிக்கையைப் பார்வையிட்டு ஆய்வுத்திட்டங்களை விரிவாகக் கூறியது.

* 30 மற்றும் 31-12-81ல் தமிழ் முதுகலைப் பேராசிரியர்களின் கருத்தரங்கு நடத்தப்பெற்றது. பங்கேற்றோர் பாடத்திட்டம், ஆய்வு ஆகியவற்றின் தரத்தைப் பெருக்கக் கருத்துரைத்தனர்.

* 24-1-82 மற்றும் 25-1-82ல் கூடிய தமிழ் இளங்கலைத் தமிழ்ப் பேராசிரியர்களின் கருத்தரங்கில் தமிழ்ப் பாடத்திட்டம், ஆசிரியர்கள் இடர்ப்பாடுகள் முதலியவற்றைப்பற்றிக் கருத்துரைக்கப்பட்டது.

* தமிழகப்புலவர் குழுவைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் 30-1-82 அன்று வரவேற்றுப் பாராட்டியது.

* செந்தமிழ்க் கல்லூரித் தலைவர்கள், பேராசிரியர்கள் கூடி, கல்வித் தரம் பற்றி இரண்டு நாள் ஆய்ந்தனர்.

* 30-1-82 அன்று கூடிய ஆட்சிக்குழுக் கூட்டத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கென ஒருநவீன அச்சகம் அமைக்கத் துணைக்குழு ஒன்றை அமைக்கவும் அதற்குரிய செயல் முறைகளை ஆராயவும் முடிவு செய்யப்பட்டது.

* 13 மற்றும் 14-2-82 இல் பொறியியலறிஞர்கள் 40 பேர் கூடிப் பொறியியற் பாடத்திட்டத்தையும் பயிற்று மொழியையும் தமிழ்ப்படுத்தலைப்பற்றி ஆய்ந்து பேசினர்.

உதவுக!

கிடைத்தற்கரிய பழஞ்சுவடிகள் இருப்பின் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குத் தந்துதவுக. அஃது இயலாவிட்டால் நிழற்பதிவு (மைக்ரோ பிலிம்) செய்ய உதவுக!

- நன்றியுடைய,
தமிழ்ப் பல்கலைக் கழகம்.

* 6 மற்றும் 7-3-82 ஆகிய நாட்களில் கூடிய மருத்துவக் கருத்தரங்கில் மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்களும், முதல்வர்களும் பாடத்திட்டம், தமிழைப் பயிற்று மொழியாக்குதல் பற்றிக் கருத்துரைத்தனர்.

* கட்டடம் அமைக்கத் தொழில் நுட்ப இயக்குநரின் மேற்பார்வையில் தொழில் நுட்பப் பொறியாளர்களை நியமிக்க அரசாங்கம் 10-3-82ல் கட்டளை பிறப்பித்தது. கட்டட உருவாக்கத்தில் ஏறத்தாழ 5 கோடி ரூபாய் செலவாகும். நில விலையாக அரசாங்கம் 32 இலட்சம் கொடுப்பதற்குக் கட்டளை பிறப்பித்தது.

* தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 1000 ஏக்கர் நிலஎடுப்பு வேலை விரைந்து நடைபெற்று வருகிறது.

* 20-3-82ல் கூடிய பல்கலைக் கழக இரண்டாவது பேரவைக்கூட்டம் 1982-83க்குரிய நிதி அறிக்கையை ஆராய்ந்து ஆய்வுத் திட்டங்களுக்குரிய கருத்துரைகளைக் கூறியது.

* கல்லூரி ஆசிரியர்கள், பெயர் பெற்ற ஆய்வாளர்களுக்கு ஆய்வு நடத்தும் பொருட்டு 3000 ரூபாய் முதல் 10,000 ரூபாய் வரை மானியம் வழங்குவதற்கு விவரம் கூறி விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

* பொறியியல், மருத்துவம் ஆகிய துறைகளுக்குரிய பாடநூல்களை உருவாக்க ஒவ்வொரு நூலுக்கும் ஏறத்தாழ 5000 ரூபாய் கொடுக்கும் செய்தி விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

* இருமாவட்டங்களில் எல்லா ஊர்களையும் முதுகலை மாணவர்கள் சென்று பார்த்து, மொழி, மக்கள் தொகை, நாட்டுத் தெய்வங்கள், வழிபாட்டு முறை, பண்பாட்டுச் சிறப்பு, புலவர்களின் விவரம், ஏடு, கல்வெட்டு இருக்கும் செய்தி முதலியவற்றைத் திரட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

* கலைச்சொல்லாக்கக்குழு ஒன்று அடிப்படைக் கொள்கைகளை ஆராய்ந்து கருத்துப்பரிமாறும் முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

* விரைவில் மிகுதியான நூல்களை வாங்கி நூல் நிலையத்தை விரிவுபடுத்த ஆவன செய்யப்பெற்று வருகிறது.

உறுப்பினர் பெருமக்கள்

வல்லுநர் குழு :

1) டாக்டர் வ. சுப. மாணிக்கம்,
தலைவர், துணைவேந்தர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.
2) டாக்டர் ம. பொ. சிவஞானம்,
மேலவைத் தலைவர், சட்டமன்றம்.
3) டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம், திருச்சி.
4) டாக்டர் வா. செ. குழந்தைசாமி, துணைவேந்தர், அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகம்.
5) டாக்டர் மா. நன்னன், தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை.
6) டாக்டர் சாலை இளந்திரையன்,
தில்லிப் பல்கலைக்கழகம்.
7) டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், இயக்குநர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
8) திரு. இரா. மீனாட்சிசுந்தரம்,
அரசுச் சார்புச் செயலாளர், கல்வித்துறை.

தற்காலிக ஆளுநர் குழு :

1) டாக்டர் வ. அய். சுப்பிரமணியம்,
துணைவேந்தர் தமிழ்ப் பல்கலைக் கழகம்.
2) அரசுக் கல்வித்துறைச் செயலாளர்.
3) அரசு நிதித்துறைச் செயலாளர்.
4) டாக்டர் வ. சுப. மாணிக்கம், துணைவேந்தர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
5) டாக்டர் வா. செ. குழந்தைசாமி, துணைவேந்தர், அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகம்.
6) தாமரைத்திரு. நெ. து. சுந்தரவடிவேலு, முன்னாள் துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்.
7) திரு. பி. எல். சாமி, இ. ஆ. ப., வருவாய்ச் செயலாளர்/மாவட்ட ஆட்சியாளர், பாண்டிச்சேரி.

ஆய்வாளர்கட்கு ஓர் அறிவிப்பு

ஆய்வு மாணவர்கள் பட்டத்திற்குத் தமது கட்டுரையைப் பல்கலைக்கழகத்திற்குக் கொடுத்ததும் 50 வரிகளுள் அதன் சுருக்கத்தை எழுதி அனுப்பினால் இவ்விதழ் அதனை வெளியிடும். நூல்கள் எழுதுவோர் கருத்தறிய தமது நூல்களை அனுப்பலாம். ஆய்வுக்கேள்விகள் இருப்பின் அதற்கும் இந்தப் பக்கத்தில் விடை தர இவ்விதழ் முயலும்.

8) டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம், கல்லூரிக்கல்வி இணை இயக்குநர்.
9) டாக்டர் லலிதா காமேசுவரன், துணை முதல்வர், மருத்துவக் கல்லூரி, சென்னை.

செய்தி மலர்

பதிவெண் 15033/82×1

திங்களிதழ்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தற்காலிகப் பேரவைக்குழு:

1) டாக்டர் வ. அய். சுப்பிரமணியம், துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.
2) கல்வித் துறைச் செயலாளர்.
3) நிதித் துறைச் செயலாளர்.
4) டாக்டர் வ. சுப. மாணிக்கம், துணைவேந்தர் மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
5) டாக்டர் வா. செ. குழந்தைசாமி, துணைவேந்தர், அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகம்,
6) தாமரைத்திரு. நெ. து. சுந்தரவடிவேலு, முன்னாள் துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்.
7) திரு. பி. எல். சாமி, இ. ஆ. ப., வருவாய்ச் செயலாளர்/மாவட்ட ஆட்சியாளர், பாண்டிச்சேரி.
8) டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம், கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்.
9) டாக்டர் லலிதா காமேசுவரன், துணைமுதல்வர்' மருத்துவக்கல்லூரி, சென்னை.
10) டாக்டர் ம. பொ. சிவஞானம், மேலவைத் தலைவர், புகழ் பெற்ற தமிழறிஞர்.

முகிழ்க்கட்டும் மொழிப் பல்கலைக் கழகங்கள்!

வடமொழிக்கு மூன்று பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் இருக்கின்றன. உருது மொழிக்கு இரண்டு. தமிழ் மொழிக்கு இப்போது தான் ஒன்று தோன்றியுள்ளது. தமிழ்மொழியைப் பின்பற்றிப் பிற திராவிட மொழிகளும் பல் கலைக்கழகங்கள் அமைக்க இருக்கின்றன.

11) மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர்.
12) டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம், முத்தமிழ்க் காவலர், திருச்சி.
13) திரு. கி. வா. ஜகந்நாதன், புகழ் பெற்ற பேச்சாளர் மற்றும் தமிழறிஞர்.
14) திரு. சா. கணேசன் புகழ் பெற்ற தமிழாராய்ச்சியறிஞர்; குறிப்பாகக் கம்பன் காவியம்.
15) டாக்டர் இரா. நாகசாமி, தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர்.
16) பேராசிரியர் ஆண்ட்ரு பெர்டில், தில்லிப் பல்கலைக்கழகம்
17) துணைத்தலைவர், திராவிட மொழியியல் கழகம், திருவனந்தபுரம்.

உறுப்பினர் கட்டணம்

இச் செய்தி மலரின்
தனி இதழ் விலை 50 காசு.
ஓராண்டு உறுப்பினர் கட்டணம் ரூபாய் 5/-
மூன்றாண்டுக்கு ரூபாய் 12/-

* உறுப்பினர், இதழ் பெற விரும்பும் தமது நண்பர்கள் முகவரியையும் எழுதினால் இதழ் அனுப்பி வைப்போம்.

18) டாக்டர் ந. சஞ்சீவி, தமிழ் இலக்கியத் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.
19) டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், தமிழ் மொழித் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.
20) டாக்டர் இராம. பெரிய கருப்பன் (தமிழண்ணல்), மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
21) திரு. மீ. ப. சோமசுந்தரம், தமிழ்ப் பழங்கலைப் பண்பாட்டு இயக்கக இயக்குநர்.
22) திருமதி சௌந்தராகைலாசம், சென்னை, தமிழ்க் கவிஞர்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றவரும் பிற நாட்டுச் சிறப்பாய்வாளர்கள்:

மொழியியல் பேராசிரியர் எஸ். எம். கத்ரே' இலங்கை ஆய்வாளர் டாக்டர் சிவத்தம்பி, வாஷிங்டனில் பயின்று வரும் டாக்டர் ஆரோக்கியநாதன் ஆகியோர் சிறப்பு ஆய்வாளர்களாக அழைக்கப்பட்டுள்ளனர். முன்னவர் இருவரும் பணியில் சேர்ந்துள்ளனர். பின்னவர் விரைவிற் சேர்வார்.

* மராத்தியர் வாழ்ந்த காலத்தில் அரசாங்க மொழியை மோடி என்னும் எழுத்தில் எழுதிப் பயன்படுத்தினர்.

* பதினெட்டு-பத்தொன்பதாவது நூற்றாண்டில் பொருளாதார, சமுதாய நிலையை அறிவதற்கு இந்த மோடி ஆவணங்கள் ஆராயப்படுகின்றன.

-இவ்வாராய்ச்சியில் வெளிப்படும் சுவை மிக்க செய்திகள் தொடர்ந்து இவ்விதழில் வெளியாகும்.

பதிப்பாசிரியர்: சு. செல்லப்பன், பதிப்புத்துறை இயக்குநர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.
அச்சிட்டோர்: மீரா ஃபௌண்டேஷன் பிரஸ், சென்னை.